ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2067/16 - 2018 අප්‍රේල් මස 19 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.04.19

*2067/16 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.பி. 21/1978 (x).

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

25 அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25 அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கபீர் ஹாஷிம் ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்றாகவுள்ளதும், GL24 என்ற பதிவிலக்கத்தைக் கொண்டதுமான ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னொலொஜி (உத்தரவாதம்) லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் 2018, சனவரி 24 ஆந் திகதிய 2055/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, அதன் அட்டவணை II இன் முறையே நிரல் I இலும் மற்றும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற "பௌதிக விஞ்ஞானத்தில் கௌரவக் கல்வி இளமாணி" என்னும் பதிவை உடனடுத்து, இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இதற்கான அட்டவணை II இல் முறையே நிரல் I இன் கீழும் மற்றும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

கபீர் ஹாஷிம்,
உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்.

கொழும்பு,
2018, ஏப்பிறல் 18.

### அட்டவணை I

நிபந்தனைகள்

இலங்கைத் தகவல் தொழில்நுட்பவியல் நிறுவகம் (உத்தரவாதம்) லிமிட்டெட், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட -

(i) உயிரியல் விஞ்ஞானத்தில் கௌரவ கல்வி இளமாணி என்ற பட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் மாணவர்களைச் சேர்க்கும் போது, க.பொ.த (உயர் தரப்) பரீட்சையில் உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் மற்றும் கமத்தொழில் என்னும் பாடங்களிலிருந்து ஒரே தடவையில் மூன்று (03) 'S' சித்திகளென்ற அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

1A - PG 3996 - 507 (2018/04)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ii) ஆங்கிலத்தில் கௌரவக் கல்வி இளமாணி என்ற பட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் மாணவர்களைச் சேர்க்கும் போது, க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடத்துறையில் (முக்கியமான மூன்று பாடங்களில் 'ஆங்கிலம்' ஒரு பாடமாக இருத்தல் வேண்டும்) மூன்று (03) 'S' சித்திகளென்ற அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கம்* |
|---|---|
| உயிரியல் விஞ்ஞானத்தில் கௌரவக் கல்வி இளமாணி | பி ஈ டி கௌரவ (உயிரியல் விஞ்ஞானம்) |
| ஆங்கிலத்தில் கௌரவக் கல்வி இளமாணி | பி ஈ டி கௌரவ (ஆங்கிலம்) |

5 - 40

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.